Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 70 · வெள்ளிக்கிழமை Friday · 09.01.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.3 ஆயிரம் வழங்கும் பணி

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்



சென்னை,

தமிழர் பண்டிகையாம் பொங்கல் திருநாளை சிறப்பாக கொண்டாட தமிழக அரசு சார்பில் 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 730 அரிசி ரேஷன் அட்டைதாரர்களுக்கும், இலங்கை தமிழர் குடும்பங்களுக்கும், ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு பொருட்களுடன் தலா ரூ.3 ஆயிரம் ரொக்கத்தொகையும் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் பொங்கல் பரிசு தொகுப்பு வினியோகத்தை சென்னை ஆலந்தூர், நசரத்புரத்தில் உள்ள ரேஷன் கடையில் தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின்(வியாழக்கிழமை) தொடங்கி வைத்தார்.இந்தநிகழ்வில் அமைச்சர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் உடனிருந்தனர். திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளநிலையில், இன்றைய தினமே அனைத்து ரேஷன் கடைகளிலும் பொதுமக்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தின் அடிப்படையில் பரிசுத் தொகுப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பொங்கல் பரிசு தொகுப்பு வினியோகத்திற்கான முன்னேற்பாடு நடவடிக்கைகளை கூட்டுறவுத்துறை அதிகாரிகள், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

அதன்படி, தமிழகம் முழுவதும் உள்ள ரேஷன்கடைகளுக்கு பொங்கல் பரிசு தொகுப்புக்கான அரிசி மற்றும் சர்க்கரை 100 சதவீதம் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.மேலும், கடந்த ஆண்டுகளில் பொங்கல் பண்டிகைக்கு வினியோகிக்கப்பட்ட வேட்டி-சேலைகளில் 80 சதவீதம் மட்டுமே மக்களால் நுகர்வு செய்யப்பட்டு உள்ளதாகவும், அந்த வகையில் கடந்த ஆண்டுகளில் நுகர்வு செய்யப்பட்ட வேட்டி-சேலைகளில் 100 சதவீதம் அனைத்து ரேஷன் கடைகளுக்கும் நுகர்வு செய்யப்பட்டு உள்ளதாகவும்,எஞ்சிய வேட்டி-சேலைகள் குடோன்களில் இருப்பு இருப்பதாகவும் தேவைப்படும் ரேஷன் கடைகளுக்கு உடனடியாக வழங்கப்படும்என்றும்அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

அதேபோன்று, முழு கரும்பை பொறுத்தவரையில் ஒவ்வொரு ரேஷன் கடைக்கும் 50 முதல் 80 சதவீதம் கரும்புகள் நகர்வு செய்யப்பட்டு உள்ளதாகவும்,கரும்பைபசுமையாக வழங்கும் நோக்கத்தில் இது போன்று வினியோகம் செய்யப்படுவதாகவும், தொடர்ந்து தேவையான அளவு கரும்புகள் மாவட்ட நிர்வாக குழுக்களால் சம்பந்தப்பட்ட ரேஷன் கடைகளுக்கு பசுமையாகவே வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மலைவாழ் பகுதி மக்கள் அதிகாலையிலேயே வேலைக்கு கிளம்புவதால், மலைவாழ் மக்கள் வசிக்கும் இடங்களில் உள்ள ரேஷன் கடைகள் காலை 6 மணிக்கே திறக்கப்படும் என்றும், பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் ரொக்கப்பணம் வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொங்கல் பரிசு தொகுப்பு வினியோகத்தி ற்கான டோக்கன் வழங்கும் பணி நேற்றுடன் நிறைவடைந்துள்ளது. டோக்கன் இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் சம்பந்தப்பட்ட ரேஷன் கடை ஊழியர்களை அணுகி பொங்கல் பரிசு தொகுப்புகளை அவர்கள் குறிப்பிடும் நாட்களில் வந்து பெற்றுக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒரே வளாகத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட ரேஷன் கடைகள் இருக்கும் பகுதிக்கு போலீஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளதாகவும், ரூ.3 ஆயிரம் ரொக்கத் தொகையை பயனாளிகள் முன்பு எண்ணி வெளிப்படையாக வழங்க வேண்டும் என்றும், பொங்கல் பண்டிகை வரை ரேஷன் கடை ஊழியர்கள் விடுப்பு எடுக்கக் கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# கூட்டணிக்கு அ.தி.மு.க.தான் தலைமை முதலமைச்சர் ஸ்டாலின் தவறான செய்தியை பரப்பி வருகிறார்; எடப்பாடி பழனிசாமி பேட்டி



டெல்லி: "கூட்டணிக்கு அதிமுகதான் தலைமை. முதலமைச்சர் தவறான செய்தியை பரப்பி வருகிறார்" என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டை ஆள டெல்லி முயற்சிப்பதாக அமித் ஷா பேசியதை சுட்டிக்காட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் பேசியதற்கு எடப்பாடி பழனிசாமி பதில் அளித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா 2 நாள் பயணமாக அண்மையில் தமிழகம் வந்திருந்தபோது, அவரை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சந்திக்கவில்லை. அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி சந்தித்து பேசினார்.

இதையடுத்து நேற்று சென்னையில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து அதிமுக கூட்டணியில் பாமக இணைவதை உறுதி செய்தார். இதையடுத்து அவசர பயணமாக டெல்லி சென்றார் எடப்பாடி பழனிசாமி. அங்கு நேற்று இரவு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்தார்.சுமார் 45 நிமிடங்கள் நீடித்த இந்த ஆலோசனையில், தமிழக சட்டமன்ற தேர்தல் கூட்டணி கணக்குகள் மற்றும் தொகுதி பங்கீடு குறித்து விவாதிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் கட்சிகளுக்கான இடங்களை பகிர்ந்தளிப்பது குறித்து அமித் ஷா உடன் எடப்பாடி பழனிசாமி ஆலோசித்ததாக கூறப்படுகிறது.தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், அதிமுக-பாமக-பாஜக கூட்டணி அடுத்தடுத்து எடுக்கும் இந்த அதிரடி நடவடிக்கைகள் தமிழக அரசியல் களத்தை அனல் பறக்க செய்துள்ளன. இந்நிலையில் டெல்லியில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார் இபிஎஸ்.

அப்போது பேசிய எடப்பாடி பழனிசாமி, "அமித்ஷாவிடம் கூட்டணி நிலவரம் குறித்து எதுவும் பேசவில்லை. தமிழ்நாட்டின் அரசியல் சூழல் குறித்து என்னிடம் கேட்டறிந்தார்.திருச்சி, புதுக்கோட்டைக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வந்தபோது என்னால் அவரை நேரில் சந்திக்க முடியவில்லை. அதனால் தான் டெல்லிக்கு வந்து அவரை சந்தித்து இருக்கிறேன். யாருடன் கூட்டணி பேச்சுவார்த்தை என வெளிப்படையாகப் பேச முடியாது. வரும் சட்டசபை தேர்தலில் அதிமுக கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். கூட்டணியில் பல கட்சிகள் இணைய உள்ளன. எங்கள் கூட்டணி வெற்றிக் கூட்டணியாக அமையும்.

டெல்லி தமிழ்நாட்டை ஆட்சி செய்யக்கூடாது என்பதுதான் எங்களது நிலைப்பாடும் கூட எங்களது கூட்டணிக்கு அதிமுக தான் தலைமை வகிக்கிறது. கூட்டணிக்கு அதிமுகதான் தலைமை. முதலமைச்சர் தவறான செய்தியை பரப்பி வருகிறார். தமிழகத்தில் திமுகவை வீழ்த்த வேண்டும் என்பதற்காக வலுவான கூட்டணி அமைத்துள்ளோம். திமுகவை வீழ்த்தி 2026 -ல் அதிமுக ஆட்சி அமைக்கும்.மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் அதிமுகவின் உள்கட்சி விவகாரங்களில் தலையிட மாட்டோம் என ஏற்கனவே உறுதியாக கூறிவிட்டார்.

அதிமுகவில் ஓ.பன்னீர்செல்வத்துக்கு இடமில்லை என பலமுறை சொல்லிவிட்டேன், அதிமுகவில் ஓபிஎஸ்,சசிகலா சேர்வதற்கு வாய்ப்பில்லை. 5.5 லட்சம் கோடி கடனை வைத்துவிட்டு தான் திமுக ஆட்சியில் இருந்து இறங்கப் போகிறது.

75 ஆண்டுகள் இந்த நாட்டை பல கட்சிகள் ஆட்சி செய்திருக்கிறது இவ்வளவு கடன் வாங்கியது யாரும் கிடையாது தமிழ்நாட்டில் போதை நடமாட்டம் அதிகரித்துள்ளது கொலை கொள்ளை என சட்டம் ஒழுங்கு சீர் கெட்டுப் போய் உள்ளது." எனத் தெரிவித்துள்ளார் எடப்பாடி பழனிசாமி.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# புகையில்லா போகி பண்டிகையை கொண்டாட பொதுமக்களுக்கு மாசுக் கட்டுப்பாடு வாரியம் வேண்டுகோள்



புகையில்லா போகி பண்டிகையை கொண்டாட பொதுமக்களுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது; நமது முன்னோர்கள் பொங்கல் திருநாளுக்கு முன் பழைய கழிதலும். புதியன புகுதலும் என்ற அடிப்படையில் போகிப் பண்டிகையினைக் கொண்டாடி வந்துள்ளனர். இயற்கைப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட பழைய பொருட்களை தீயிட்டுக் கொளுத்தி வந்துள்ளனர். இச்செய்கையால் காற்று மாசுபடாமல் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லாமல் இருந்து வந்துள்ளது. ஆனால் இன்றைய சூழலை எடுத்துக்கொண்டால், தற்பொழுது போகிப் பண்டிகையின் பொழுது பழைய பொருட்களான பிளாஸ்டிக், செயற்கை இழைகளால் தயாரிக்கப்பட்ட துணிகள், ரப்பர் பொருட்கள்,பழைய டயர் மற்றும் டியூப், காகிதம், இரசாயனம் கலந்த பொருட்கள் போன்றவற்றை எரிப்பதால் காற்று மாசு ஏற்படுவதோடு போகி அன்று எரிக்கப்படும் பொருட்களால் ஏற்படும் அடர்ந்த புகையின் காரணமாக விமானங்கள் வருகை மற்றும் புறப்பாடுகளில் தாமதம் ஏற்படுகிறது.

சென்னைநகரில்போகி அன்று எரிக்கப்படும் மேற்படி பொருட்களால் புகை மண்டலம் ஏற்பட்டு வாகன ஓட்டிகளுக்கு மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதோடு விபத்துகளுக்கும் காரணமாக உள்ளது.பழைய பிளாஸ்டிக் பொருட்கள், டயர் மற்றும் டியூப் போன்றவற்றை எரிப்பதால் வெளிப்படும் நச்சு வாயுக்களால் மூச்சு திணறல், கண் எரிச்சல் போன்ற நோய்களால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இத்தகைய செயல்கள் பொதுமக்களிடம்விழிப்புணர்வு இல்லாமையால் ஏற்பட்டு வந்தது.இதனை தவிர்க்க,தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கடந்த 21 ஆண்டுகளாக போகிப்பண்டிகைக்கு முன் பொதுமக்களிடைய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றது. இதன் காரணமாக கடந்த வருடங்களில் பழைய ரப்பர் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் டயர், டியூப் போன்றவற்றை எரிப்பது பெரும்பாலும் குறைந்துள்ளது. மேலும், போகிப்பண்டிகையின் போது சென்னை மாநகரத்தின் சுற்றுச்சூழல் காற்று தரத்தினை கண்காணிப்பு செய்யும் பொருட்டு, வாரியம் போகிப்பண்டிகையின் முந்தைய நாள் மற்றும் போகிப்பண்டிகை நாளிலும், 15 இடங்களில் 24 மணிநேரமும்காற்றுத்தரத்தினை கண்காணிக்க, காற்று மாதிரி சேகரிப்பு செய்து ஆய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

# தூத்துக்குடி போல்பேட்டை பகுதியில் பொங்கல் பரிசு தொகுப்பு பொருட்களை மேயர் ஜெகன் பெரியசாமி வழங்கினார்



தமிழகஅரசு பொங்கல் பண்டிகை முன்னிட்டு ஸ்மார்ட் கார்டு வைத்திருக்கும் அனைவருக்கும் பொங்கல் பரிசு தொகையாக ரூ.3000 ரூபாய், வேஷ்டி சேலை பச்சரிசி. சீனி. கரும்பு உள்ளிட்ட பொருட்களை ஒவ்வொரு குடும்ப அட்டை உள்ளவர்களுக்கும் வழங்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் அறிவித்திருந்தார். அதன்படி தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் திட்டத்தை தொடங்கி வைத்ததையடுத்துதூத்துக்குடி போல்பேட்டை பகுதியில் உள்ள டி.எம்.சி காலணி நியாய விலை கடையில் பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு ரூ.3000 மற்றும் பொங்கல் தொகுப்புகளை மேயர் ஜெகன் பெரியசாமி பொதுமக்களுக்கு வழங்கி கூறுகையில்: தமிழகத்தில் ஆட்சி செய்யும் திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் ஸ்டாலினுக்கு நீங்கள் எப்போதும் துணையாக இருக்க வேண்டும். நான்கு வருடங்களுக்கு முன்பு தூத்துக்குடி மாநகராட்சி பகுதி எப்படி இருந்தது தற்போது எப்படி இருக்கிறது என்பதை பார்க்க வேண்டும் ஒரு காலத்தில் குடிநீர் எப்போது வரும்என்று காத்திருந்த காலம் உண்டு ஆனால் தற்போது தமிழக முதலமைச்சர் உத்தரவின் பேரில் தினசரி குடிநீர் வழங்கப்படுகிறது வரும் சில மாதத்தில் மாநகராட்சி பகுதியில் 24 மணி நேரமும் குடிநீர் வினியோகம் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. அதுபோல சாலை வசதி. கழிவுநீர் கால்வாய் வசதி உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்பு வசதிகள் எல்லாம்செய்து கொடுக்கப்பட்டுள்ளது ஆகையால் வரும் 2026ம் ஆண்டு நீங்கள் எல்லோரும் தமிழக அரசுக்கும் தமிழக முதலமைச்சருக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டாா.

நிகழ்ச்சியில் முன்னாள் மாமன்ற உறுப்பினரும் திமுக வட்டச் செயலாளர் ரவீந்திரன். போல்பேட்டை பகுதி பிரதிநிதிகள் பிரபாகர், ஜேஸ்பர், அவைத்தலைவர் அற்புதராஜ், வட்டப் பிரதிநிதி அருணகிரி, 20வது வாா்டை சோ்ந்த பாலசுப்பிரமணியன், வசந்தகுமாா், ஆனந்தகுமாா், சிவபாலாஜி, ராஜ்குமாா், பொியசாமி தங்காராஜ்,ஜெயபாண்டி, உள்ளிட்ட திமுகவினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.3 ஆயிரம் வழங்கும் பணியை அமைச்சர் கீதாஜீவன் தொடங்கி வைத்தார்



தமிழர் பண்டிகையாம் பொங்கல் திருநாளை சிறப்பாக கொண்டாட தமிழக அரசு சார்பில் ஆண்டுதோறும் பொங்கல் பரிசு தொகுப்பு பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு பொங்கல் ரொக்கப்பரிசு வழங்காத நிலையில், இந்த ஆண்டு பொங்கல் பரிசாக ரூ.3 ஆயிரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை கொண்டாட தமிழகத்தின் 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 730 அரிசி ரேஷன் அட்டைதாரர்களுக்கும், இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும், இந்த ஆண்டு பொங்கல் பரிசுத்தொகுப்புபொருட்களுடன் தலா ரூ.3 ஆயிரம் ரொக்கத்தொகையும் வழங்கப்படுகிறது.

பொங்கல் பரிசு தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி,ஒருகிலோசர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு வழங்கப்படுகிறது. இதற்காக, தமிழக அரசு சார்பில் ரூ.248 கோடியே 66 லட்சத்து 17 ஆயிரத்து 959 நிதி ஒதுக்கி அரசு அரசாணைவெளியிட்டது. இந்த நிலையில் அரசி ரேஷன் அட்டைதாரர்களுக்கு தலா ரூ.3 ஆயிரம் ரொக்கப்பரிசு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பொங்கல் பரிசுத்தொகுப்பும், ரொக்கப் பரிசும் சேர்த்து மொத்தம் ரூ.6 ஆயிரத்து 936 கோடியே 17 லட்சத்து 47 ஆயிரத்து 959 செலவில் இந்த திட்டம் செயல்படுகிறது.

இதற்கான டோக்கன் விநியோகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் வழங்கப்பட்டது. இந்நிலையில், பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின, ஆலந்தூர் நசரத்புரத்தில் உள்ள ரேஷன் கடையில் தொடங்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து தூத்துக்குடியில் பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகத்தை டூவிபுரம் ரேஷன் கடையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பை வழங்கினார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு, மொத்தம் 957 நியாயவிலைக் கடைகள் மூலம் 1 கிலோ பச்சரிசி,1 கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு, ரொக்கத் தொகை ரூ. 3,000 இந்தப் பொங்கல் பரிசு வழங்கப்படுகிறது. இதன் மூலம் மாவட்டத்தில் உள்ள மொத்தம் 5,41,007 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுகின்றனர்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் இரவிச்சந்திரன், கூட்டுறவு இணைபதிவாளர் காந்திமதிநாதன், துணை பதிவாளர் கலையரசி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# மடப்புரம் கோயில் காவலாளி கொலை வழக்கில் டிஎஸ்பி சண்முக சுந்தரத்தின் முன்ஜாமீன் மனு ரத்து.



சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் கொலை வழக்கில், பணியிடை நீக்கத்தில் உள்ள டிஎஸ்பி சண்முக சுந்தரத்தின் முன்ஜாமின் மனுவை உயர் நீதிமன்றக் கிளை தள்ளுபடி செய்தது. மேலும் வழக்கு விசாரணையின் போது சண்முக சுந்தரத்தை இன்னும் ஏன் கைது செய்யவில்லை என நீதிபதிகள் கேள்வி ஏழுப்பியுள்ளனர். இவ்வழக்குசம்பந்தமாக சிபிஐ தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், ஏற்கனவே கைது செய்யப்பட்ட காவலர்களுக்கு நீதிமன்றம் ஜாமின் வழங்கவில்லை. எனவே, மனுதாரரை கைது செய்து விசாரிக்க வேண்டியதுள்ளது என தனது வாதத்தை முன்வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிவகங்கை மாவட்டத்தில் 116 ஊர்க்காவல்படை பணியிடங்களை நிரப்புவதற்கான தேர்வு தேதி அறிவிப்பு



சிவகங்கை மாவட்டத்தில் 83 ஆண்கள் மற்றும் 33 பெண்கள் கொண்ட 116 ஊர்க்காவல்படை காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான தேர்வு வருகிற ஜனவரி 9ஆம் தேதியன்று சிவகங்கையில் உள்ள மாவட்ட ஆயுதப்படை மைதானம் நடைபெற உள்ளது. இதில் சான்றிதழ் சரிபார்ப்பு, உடற்தகுதித் தேர்வும் நடைபெறவுள்து. இத்தேர்விற்கு விண்ணப்பித்தவர்கள் கட்டாயம் அசல் சான்றிதழ்கள் மற்றும் நகல்களுடன் பங்கேற்க வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா. சிவபிரசாத் தெரிவித்துள்ளார். மேலும் இத்தேர்விற்கான தேதியானது ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில், பின்னர் மாற்றம் செய்யப்பட்டு,தற்போது தேர்வு தேதி அறிவிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பெரும்பேர் கண்டிகையில் நாட்டு நல பணி திட்ட முகாம் துவக்கம்



செங்கல்பட்டு மாவட்டம் பெரும்பேர் கண்டிகை ஊராட்சியில், மதுராந்தகத்தில் உள்ள மாலோலன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பாக, 7 நாட்கள் சிறப்புமுகாம்,நேற்று துவங்கியது.

பெரும்பேர் கண்டிகை ஊராட்சி மன்ற தலைவர் சாவித்திரி சங்கர் வரவேற்றார்.

கல்லூரி இயக்குனர் சுபத்ரா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முகாமினை தொடங்கி வைத்தார்.

கல்லூரி முதல்வர் முருகானந்தம்முன்னிலை வகித்தார்.

முகாமில் 100 நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதில், 7 நாட்கள் பெரும்பேர் கண்டிகை ஊராட்சியில் தங்கி, கோயில், பள்ளி வளாகம் சுத்தம் செய்தல்,போதை தடுப்பு, பாதுகாப்பான இணைய சேவை, வாக்காளர், பிளாஸ்டிக் ஒழிப்பு, ரத்ததான, உடல் ஆரோக்கிய, டிஜிட்டல் கல்வி அறிவு குறித்த விழிப்புணர்வு மற்றும் மருத்துவ முகாம் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில், நாட்டு நலபணி திட்ட அலுவலர் தினேஷ் பாபு, குருநாதன் மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, பெரும்பேர் கண்டிகை ஊராட்சியில், எல்லையம்மன் கோவில் அருகே தேசியக்கொடி ஏற்றி நாட்டு நல பணி திட்டம் முகாம் துவக்கி வைக்கப்பட்டது.

# தூத்துக்குடி மாவட்ட காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர்க்கும் மனு கூட்டம் எஸ்.பி. பங்கேற்பு



தமிழ்நாடு காவல்துறைதலைமை இயக்குநர் உத்தரவின்படி ஒவ்வொரு வாரமும் புதன்கிழமையிலும் பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்டம் தூத்துக்குடி மாவட்ட காவல்துறை அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது.

அதன்படி இன்று மாவட்ட காவல் அலுவலகத்திற்குமனுகொடுக்க வந்த 42 மனுதாரர்கள் தங்கள் குறைகளைதூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் நேரடியாக தெரிவித்து புகார் மனு அளித்தனர். பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உடனடியாக விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# உளுந்தூர்பேட்டை கிழக்கு கந்தசாமிபுரத்தில் பொங்கல் பரிசுத்தொகை வழங்கல்; மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை நகராட்சி கிழக்கு கந்தசாமிபுரம் பகுதியில் அமைந்துள்ள நியாய விலை கடையில் தமிழக முதல்வர் அறிவித்த பொங்கல் பரிசுத் தொகை ரூபாய் 3000 மற்றும் பொங்கல் தொகுப்புகள் பொதுமக்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு,பொதுமக்களுக்கு பொங்கல் பரிசுத் தொகை ரூபாய் 3000 மற்றும் பொங்கல் தொகுப்புகளை வழங்கினார். தமிழக அரசு பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு தொடர்ந்து பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும், பண்டிகை காலங்களில் ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையில் இத்தகைய திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் உளுந்தூர்பேட்டை நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு, துணைத் தலைவர் வைத்தியநாதன், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் டேனியல் ராஜ், ஒன்றிய சேர்மன் ராஜவேல் ஆகியோர் கலந்துகொண்டு,தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்களின் முக்கியத்துவம் குறித்து பேசினர்.

இதில் உளுந்தூர்பேட்டை நகர மன்ற உறுப்பினர்கள் மாலதி இராமலிங்கம், செல்வகுமாரி இரமேஷ்பாபு, கலா சுந்தரமூர்த்தி, சிவசங்கரி சந்திரகுமார், மனோபாலன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பி த்தனர். நிகழ்ச்சியில் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு பொங்கல் பரிசுத் தொகை மற்றும்பொங்கல்தொகுப்புகளை பெற்றுச் சென்றனர்.

இந்த நிகழ்ச்சி பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதுடன், தமிழக அரசின் நலத்திட்டங்கள் அடித்தட்டு மக்களுக்குச் சென்று சேர்வதற்கான சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது.



கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் ஒன்றியம் அந்தேரிப்பட்டி ஊராட்சி பெரிய ஜோகிப்பட்டி கிராமத்தில் தமிழக முதல்வர் அறிவித்துள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூபாய் 3000 இன்று பெரிய ஜோகிப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ரேஷன் கடையில் பொதுமக்களுக்கு KRKநரசிம்மன் ஒன்றிய கழக செயலாளர் (தெற்கு ) பர்கூர்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தலைமையில் பொதுமக்களுக்கு வழங்கினார் உடன் விஜயன் மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் வடக்கு விஜயரங்கன் அமைப்பு சாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் பாஸ்கரன் விவசாய அணி துணை அமைப்பாளர் (தெற்கு )வெங்கடேசன் கிளை பிரதிநிதி மணிமாறன் கிளை துணைச் செயலாளர் கோவிந்தராஜ் கிளை அவைத்தலைவர் நடராஜன் TNSTCநடத்துனர் BLC முன்ராஜ் BLC மனோகரன்BLC மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் சங்கரன் முருகன் கோவிந்தசாமி முருகன் சென்ன கிருஷ்ணன் கிருஷ்ணன் சின்ராஜ் மகளிர் அணி நிர்வாகிகள் கலைவாணி BLC கலா இன்பராணி ஆகியோர் கலந்து கொண்டு தமிழக முதல்வர் அறிவித்த பொங்கல் போனஸ் தொகை பொதுமக்களுக்கு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டனர்

# தமிழ்நாடு அரசு கிராம உதவியாளர்கள் சங்கத்தின் வட்ட கூட்டம் சிவகங்கையில் நடைபெற்றது



தமிழ்நாடு அரசு கிராம உதவியாளர்கள் சங்கத்தின் சிவகங்கை வட்ட கூட்டம் சிவகங்கையில் உள்ள பயணியர்விடுதியில் நடைபெற்றது.இதில் காலமுறை ஊதியம், பழைய பென்ஷன் திட்டம் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநிலத் துணைத் தலைவர் வி. மாரி, மாநில இணை செயலாளர் மு. ரமேஷ், சிவகங்கை மாவட்ட தலைவர் மு. சுருளிப்பாண்டி, வட்டத் தலைவர் வி. கார்த்திகேயராஜா, வட்டத் துணைத் தலைவர் தமிழ்மாரி, வட்ட பொருளாளர் ப. விஜய பிரபாகரன், வட்ட செய்தி தொடர்பாளர் கே.மீனாம்பால்,வட்டச்செயலாளர்வெள்ளைச்சாமி, சிவகங்கைஉள்வட்டதலைவர்கள் சிவகங்கைஇமாம் உசேன், பெரியகோட்டை பி. மாரீஸ்வரி, ஒக்கூர் இந்திரா, மதகுபட்டி லட்சுமி, தமராக்கி சித்ரா மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கக்கோரியும்,நிலுவையில்உள்ளஊக்கத்தொகையை உடனடியாக வழங்க வலியுறுத்தியும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் ஊத்தங்கரை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு இன்று கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# அச்சிறுப்பாக்கம் அருகே ஒரத்தி ஊராட்சியில் பொங்கல் சிறப்பு பரிசு தொகுப்பு வழங்கல்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த அச்சிறுப்பாக்கம் அருகே ஒரத்தி ஊராட்சியில் பொங்கல் சிறப்பு பரிசுத்தொகை வழங்கும் விழா, ஒ.பி.சி.மாறன் முன்னிலையில் ஒன்றிய குழுப் பெருந்தலைவர் கே.கண்ணன் தலைமையில் நடந்தது.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு,மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக மக்களின் நலன் கருதி பாரம்பரிய விழாவான பொங்கல் பண்டிகை விழாவையொட்டி,சிறப்பு பரிசுத்தொகுப்பினை சென்னையில் இருந்து காணொளி காட்சி மூலம் தொடங்கி வைத்தார்.

மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், ஒரத்தி ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடையில் அச்சிறுப்பாக்கம் ஒன்றிய குழுப் பெருந்தலைவர் ஒரத்தி,கே,கண்ணன் பயணாளிகளுக்கு, ரொக்கம் ரூபாய் 3000 மற்றும் அரிசி,கரும்பு, வேட்டி,சேலை உள்ளிட்ட பொருட்களை வழங்கினார் .இந்த நிகழ்ச்சியில் கட்சியின் கழக முன்னோடிகள் எஸ்சுப்பிரமணியன்,கே, சம்பத், ஆர்,ராஜசேகர், கிருஷ்ணன், சேகர், துரைசாமி, சுப்பிரமணி, முத்து, முனுசாமி, வீரராகவன், காளி, மகளிர் அணி நிர்வாகிகள் டி,வி,நகர் கே,சத்யா, அம்மச்சி,லட்சுமி,பாரதி, ஜெயந்தி,தொடக்ககூட்டுறவு சங்க செயலாளர் ஆ,கோவிந்தசாமி,ஒரத்தி நியாய விலை கடை விற்பனையாளர் ரா,சீனிவாசன் என திரளானோர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டம் ஓமலூர் தெற்கு ஒன்றியம் தொளசம்பட்டி ஊராட்சியில் உள்ள அரசு ரேஷன் கடைகளில் பொங்கல் பரிசு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஓமலூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ACM.செல்வகுமரன் அவர்கள் தலைமையில் பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது. இதில் சேலம் மாவட்ட முன்னாள் கவுன்சிலர்கள் KSR.சண்முகம், திமுக கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## தென்காசியில் தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் சார்பில்

# நிரந்தர ஊழியர்களின் தீர்க்கப்படாத பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டிடகோரி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாடு மின் ஊழியர்மத்தியஅமைப்பின் சார்பில் நிரந்தர ஊழியர்களின் தீர்க்கப்படாத பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டிட, மின்வாரியத்தில் பணியாற்றும் நிரந்தர பணியாளர்கள், கேங் மேன் பணியாளர்கள், ஒப்பந்த பணியாளர்கள், பகுதி நேர பணியாளர்கள் என அனைவரின் கோரிக்கைகளையும் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் தென்காசி செயற்பொறியாளர் அலுவலகம்முன்புகவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தென்காசி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பட்ட முத்து தலைமை தாங்கினார்.

சிஐடியு மாவட்ட செயலாளர் மணிகண்டன் துவக்க உரையாற்றினார்.தென்காசி கோட்ட செயலாளர் இளையராஜா, சங்கரன்கோவில் கோட்டசெயலாளர்சிவராஜ், கடையநல்லூர் கோட்ட செயலாளர். சேவியர் அந்தோணி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார். மின் ஊழியர்மத்தியஅமைப்பின் மாவட்ட துணை தலைவர் அயூப் கான் நிறைவுரை ஆற்றினார். ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் ஜவகர் நன்றி கூறினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தென்காசி மாவட்டக்கிளையின் சார்பில் தென்காசி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர். திருமதி.அ. ரேணுகா அவர்களை சந்தித்து புத்தாண்டு வாழ்த்து கூறி தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி நாள்காட்டி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாநில மாவட்ட வட்டார பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



## கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள

# ஐவதுகுடி அரசு மாதிரி பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா சைக்கிள் வழங்கல்

கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள ஐவதுகுடி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பயிலும் +1 மாணவர்கள் 88 பேருக்கு அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா நேற்று 08/01/2026 வியாழக்கிழமை பள்ளியின் தலைமை ஆசிரியர் கொளஞ்சிநாதன் தலைமையில் நடைபெற்றது.

விழாவிற்கு, சிறப்பு அழைப்பாளர்களாக, பெற்றோர்ஆசிரியர்கழக தலைவரும் திமுக நல்லூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளருமான பாவாடை கோவிந்தசாமி, விசிக விருத்தாச்சலம் மாவட்ட செயலாளர் வீர திராவிட மணி ஆகியோர் பங்கேற்று மாணவர்களுக்கு விலையில்லா சைக்கிள் வழங்கினர்.

இந்நிகழ்வில், பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் முருகானந்தம், பள்ளி மேலாண்மை குழு தலைவர் மகேஷ், பெற்றோர்ஆசிரியர்கழக துணைத்தலைவர் குணசேகரன், பொருளாளர் நகர் பாபு, ஐவதுகுடி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சேகர், திமுக கிளைச் செயலாளர் நாகேஷ் மற்றும் இருபால் ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மை குழு,பெற்றோர்ஆசிரியர் குழு பிரதிநிதிகள் பலர் பங்கேற்று சிறப்பித்தனர்.




ஈரோடு மாவட்டத்திலிருந்து தேசிய அளவிலான ஜூனியர் குராஷ் சாம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகள் பீகார் மாநிலம் நாலந்தா மாவட்டம் ராஜ்கிர் ஸ்போர்ட்ஸ் காம்ப்ளெக்ஸில் ஜனவரி 8 முதல் 11 ஆம் தேதி 2026 வரை நடைபெற உள்ளது. இப்போட்டியில் தனியார் கலை அறிவியல் கல்லூரி மாணவர்கள் கமலேஸ்வரன், விஷால், ரோகித் பாண்டி, தமிழ்நாடு குராஷ் அணி தேர்வாகி விளையாட உள்ளார்கள். இதில் வெற்றி பெறும் மாணவர்கள் ஏசியன் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற வாய்ப்பு உள்ளது. இத்தகவலை ஈரோடு மாவட்ட குராஷ் சங்கத்தின் பொதுச் செயலாளர் மற்றும் பயிற்சியாளருமான மணிகண்டன் செய்தியாளர்களுக்கு தெரிவித்தார் இந்த நிகழ்வின்போது உடற்கல்வி இயக்குனர் தேவகாந்தன் மற்றும் பெற்றோர்கள் உடன் இருந்தனர்.

## சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில்

# பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் ரொக்க பணம் வினியோகம்; பொதுமக்கள் மகிழ்ச்சி



தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் இந்த ஆண்டு பொங்கலை பொதுமக்கள் மகிழ்ச்சியாக கொண்டாட வேண்டும் என்று இலவச வேட்டி சேலை, ஒரு கிலோ சர்க்கரை, ஒருகிலோபச்சரிசி,முழு கரும்பு மற்றும் ரொக்க பண மூவாயிரம் என்று அறிவித்திருந்தார் அதன்படி சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில்

இந்தத் திட்டத்தினை காரைக்குடி மாநகராட்சியின் துணை மேயர் குணசேகரன் தொடங்கி வைத்தார்.பொதுமக்கள் அதிகாலையில் இருந்தே நீண்டவரிசையில்நின்று இந்த தொகுப்பினை பெற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். பொங்கல் பரிசு தொகுப்பினை பெற்றுக்கொண்ட பொதுமக்கள் தமிழக முதல்வருக்கு நன்றி சொல்லி வாழ்த்தினார்.

# கழுதூரில் தமிழக அரசின் பொங்கல் பரிசுத் தொகுப்பு: அமைச்சர் சி.வெ. கணேசன் வழங்கினார்



கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்த கழுதூர் கிராமத்தில் உள்ள தொடக்கவேளாண்மைகூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில், தமிழக அரசின் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நேற்று 08.01.2026 வியாழக்கிழமை நடைபெற்றது. சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்த நிலையில்,கடலூர் மாவட்டத்திற்கான தொடக்க விழா நிகழ்வை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் அவர்கள் தனது சொந்தக் கிராமமான கழுதூரில் பயனாளிகளுக்குப் பரிசுத் தொகுப்புகளை வழங்கித் தொடங்கி வைத்தார்.

முதலமைச்சரின் ஆணைக்கிணங்க வழங்கப்பட்ட இந்தப் பரிசுத் தொகுப்பில் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு நீளக் கரும்பு ஆகியவற்றுடன்விலையில்லாவேட்டி,சேலைமற்றும் 3000 ரூபாய் ரொக்கத் தொகை ஆகியவை வழங்கப்பட்டன.

இந்த விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் புண்ணியகோடி, விருத்தாச்சலம் கூட்டுறவு துணைப்பதிவாளர் சவிதா, திமுக மங்களூர் வடக்கு ஒன்றிய செயலாளர் அடரி சின்னசாமி, திட்டக்குடி வருவாய் வட்டாட்சியர் உதயகுமார், மங்களூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சண்முக சிகாமணி, சிவக்குமார், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் செல்வி ராஜரத்தினம், கழுதூர் கூட்டுறவு சங்க செயலாளர் மாரிமுத்து, மற்றும் கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

## விருத்தாசலம் அடுத்த புதுக்கூரைபேட்டையில்

# சீமை கருவேல மரம் ஒழிப்பு, நெகிழி ஒழிப்பு பேரணி



விருத்தாசலம் அடுத்த புதுக்கூரைபேட்டையில் சீமை கருவேல மரம் ஒழிப்பு மற்றும் நெகிழி ஒழிப்பு பேரணி. ஜே.எஸ்.ஏ. வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, மாபொடையூர், கல்லூரி மாணவிகள் கிராமபுற வேளாண்மை பணி அனுபவத்திட்டபணிக்காக புதுக்கூரைப்பேட்டை, கிராமத்தில் தங்கி விவசாயிகளின் அனுபவங்களையும்கள அனுபவத்தையும்சேகரித்து வருகின்றனர். மேலும் விவசாயம் சார்ந்த விழிப்புணர்வுகளை கூறி வருகின்றனர்.

அன்று (06/01/2026) ஜே.எஸ்.ஏ. வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவிகளும் (ந.லிஷ்மா, ப.மதுமிதா, தி.மகேஸ்வரி, மு.மதுமிதா, ச.நித்திஷா, இரா.ராஜ காயத்ரி), கடலூர் மாவட்ட சீமைக் கருவேல மரங்களின் வேர்களைக் களையும் விழுதுகள் (வேகவி) சங்கமும் இணைந்து விருத்தாசலம் அடுத்தபுதுகூரைப்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியின் மாணவர்களுடன் சேர்ந்து சீமை கருவேல மரம் ஒழிப்பு மற்றும் நெகிழி ஒழிப்பு தொடர்பான கோஷங்களை எழுப்பி பேரணி நடைபெற்றது.

அரசு உயர் நிலைப் பள்ளியிலிருந்து விருத்தாசலம் கடலூர்நெடுஞ்சாலை வரைசென்று விழிப்புணர்வை பொது மக்களிடையில் ஏற்படுத்தினர்.

## மதுரையில் ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்க

# 12,000 காளைகள், 5,000 மாடுபிடி வீரர்கள் முன்பதிவு



மதுரை: மதுரையில் நடைபெறவுள்ள ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்க 12,000 காளைகள், 5,000 மாடுபிடி வீரர்கள் முன்பதிவு செய்துள்ளனர். ஆன்லைன் மூலம் 12,000க்கும் மேற்பட்ட காளைகள், 5,000க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் முன்பதிவு என தகவல் வெளியாகியது.

# ஈரோடு மாவட்டம் டெக்ஸ்வேலியில் தேசிய அளவிலான முதலாம் ஆண்டு பல இலக்கு விளையாட்டுப் போட்டிகள் நடந்தன

தேசிய அளவிலான முதலாம் ஆண்டு பல இலக்கு விளையாட்டுப் போட்டிகள். ஈரோடு மாவட்டம் டெக்ஸ்வேலி நடைபெற்றன இதில் வில் விளையாட்டு. டார்ட்ஸ். ரிப் ஃபைர் அண்ட் ஏர் ரைஃபிள் பெஞ்ச் ரெஸ்ட் மூன்று வகையான விளையாட்டு போட்டிகளானது 27-28 /12/2025 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றன. இதில் முதல் நாள் போட்டியை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் துவக்கிவைத்தார்.இரண்டாம் நாள் போட்டியினை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் பொது செயலாளர் எம்.யுவராஜா துவக்கி வைத்தார். இப்போட்டியில் சிறப்பு விருந்தினர்களாகவருகை தந்த டாக்டர் குமாரசாமி. காங்கேயம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி . டாக்டர் ஐயப்பன் டாக்டர் ராதிகா ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி. டாக்டர் சீனிவாசன்.காளியம்மாள் தமிழ்நாடு கலை பண்பாட்டு துறை. ஒருங்கிணைப்பாளர் லோகநாதன்.

இணை செயலாளர் மாயா வெங்கடேஷ். வரதராஜன் ஸ்ரீ சாயி கல்வி டிரஸ்ட். குரு ராஜன். சங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் டி.எஸ்.ஆர். ஈ வீ எலக்ட்ரிகல் பயணிகள் மற்றும் சரக்கு ஆட்டோ ஈரோடு பிரிவு தலைவர்கள் மனோகரன் மற்றும் ரகுநாத். ஈரோடு மாவட்ட புகைப்பட சங்க முன்னாள் தலைவர் செல்வராஜ். இணை செயலாளர் அன்பரசு. துணைத் தலைவர் அஷ்ரப். எஸ் எஸ் சூர்யா கிராபிக்ஸ் சுரேஷ். வினோத்.வருகை தந்து சிறப்பித்தனர்.தமிழ்நாடு ரிம் ஃபைர் அண்ட் ஏர் ரைஃபிள் பெஞ்ச் ரெஸ்ட் சங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் மணிவாசகம். திலீபன்.தமிழரசன்.ராஜா. மணிகண்டன். மேலும் இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளை விஜயம் ஸ்போர்ட்ஸ் அகாடமி, ON X டார்கெட் ஸ்போர்ட்ஸ் அகாடமி மற்றும் பாரத் யுவா விளையாட்டு கூட்டமைப்பு இணைந்து நடத்தினர்.இதில் அனைத்து மாநிலங்களிலும் இருந்து சுமார் 350 க்கும் மேற்பட்ட வீரர் வீராங்கனைகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மேலும் வெற்றிபெற்றவீரர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் தந்து கௌரவித்தனர். இதில் நந்தா கலை அறிவியல் கல்லூரி மாணவிகள் 17 வயதிற்கு உட்பட்டோர் பிரிவில்



அபிக்ஷா இரண்டாம் இடத்தையும். 19 வயது பிரிவில் ஜெய் ஸ்ரீ முதலிடத்தையும் ரம்யா இரண்டாம் இடத்தையும் பிடித்து ஈரோட்டிற்கு பெருமை சேர்த்தனர். இத்தகவலை தமிழ்நாடு ரிம் ஃபைர் அண்ட் ஏர் ரைஃபிள் பெஞ்ச் ரெஸ்ட் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளரும் ஈரோடு மாவட்ட தலைவரும் உடற்கல்வி இயக்குனருமான தேவகாந்தன் இத்தகவலை செய்தியாளர்களுக்கு தெரிவித்தார்.



ஈரோடு மாநகராட்சி 40வது வார்டுக்குட்பட்ட அங்கன்வாடி மையத்தில், தமிழக அரசின் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஈரோடு மாநகராட்சி40வதுவார்டுமாமன்றஉறுப்பினர்வழக்கறிஞர்ரமேஷ்குமார்கலந்துகொண்டு, அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களுக்குப் பொங்கல் பொருட்கள் மற்றும் பரிசுத் தொகுப்பினை வழங்கினார். இதில் திமுகவினர் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.



அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் தலைமையில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆ.வெங்கடேசன் அவர்கள் முன்னிலையில் மதுரை மாவட்டம் சோழவந்தான் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அலங்காநல்லூர் கிராமத்தில் உள்ள நியாய விலை கடையில் பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு 2026 வழங்கினார்கள்

# ஈரோடு சத்தியமங்கலம் அரசுப் பள்ளிகளில் போதை ஒழிப்பு மற்றும் குழந்தை திருமண தடுப்பு விழிப்புணர்வு முகாம்





ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அடுத்துள்ள கெம்மநாயக்கன்பாளையம், கிச்சரசன்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. ஈரோடு மாவட்ட சமூக நலத்துறை மற்றும் காக்கும் கரங்கள் மக்கள் நல அறக்கட்டளை இணைந்து நடத்திய இந்த முகாமில், போதைப்பொருள் ஒழிப்பு, சாலை பாதுகாப்பு விதிகள் மற்றும் இளம் வயது திருமணத்தினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விரிவான விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அரசு உயர்நிலைப் பள்ளியிலும் இதேபோன்ற விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிகளில் மாணவர்களுக்கு போதைப்பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி, கட்டாயம் தலைக்கவசம் அணிவதன் அவசியம் மற்றும் குழந்தை திருமணத்தை தடுத்தல் குறித்த ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இதில் பள்ளித்தலைமை ஆசிரியர்கள் இளங்கோ, ராஜேந்திரன் தலைமை தாங்கினார். சமூக நலத்துறை சார்பில் வழக்கு பணியாளர் மணிமேகலை மற்றும் காக்கும் கரங்கள் மக்கள் நல அறக்கட்டளையின் நிறுவனத்தலைவர் ஜெ.சாந்தாதேவி ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களிடையே விழிப்புணர்வு உரையாற்றினர்.

மேலும், இந்த முகாமில் சத்தியமங்கலம் அனைத்துமகளிர்காவல் நிலைய உதவி ஆய்வாளர் மகேஸ்வரி கலந்து கொண்டு சட்ட விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து எடுத்துரைத்தனர். இந்நிகழ்வில் ஆசிரியப் பெருமக்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவ-மாணவியர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# ஈரோடு ரத்னா ரெசிடென்சியில் உற்சாகமான ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டம்: பாடகி தேவகோட்டை அபிராமி பங்கேற்பு




ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு ஈரோடு ரத்னா ரெசிடென்சியில் பிரம்மாண்டமான கொண்டாட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாலை 6 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை நடைபெற்ற இவ்விழாவில், சிறுவர்கள்,பெரியவர்கள் மற்றும் தம்பதியினருக்கு எனத் தனித்தனியாகப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு உடனுக்குடன் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவின் சிறப்பம்சமாகப் பிரபல பாடகி தேவகோட்டை அபிராமி தனது இன்னிசையால் அனைவரையும் இசை மழையில் நனைய வைத்தார்.

தொடர்ந்து நிர்வாகத்தின் சார்பில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

நள்ளிரவு 11:59 மணிக்கு 30 கிலோ எடையுள்ள பிரம்மாண்ட கேக்கினை அனைவரும் ஒன்றிணைந்து வெட்டி, மிகுந்த புத்துணர்ச்சி யுடன் புத்தாண்டை வரவேற்றனர். குடும்பத்து டன் பங்கேற்ற பொதுமக்கள், ரத்னா ரெசிடென்சியின் சிறப்பான ஏற்பாடுகளைப் பாராட்டியதுடன், குழந்தைகள், பெண்கள் பாதுகாப்பாக கொண்டாடுவதற்கு இது சரியான இடம் என்றும் அடுத்த ஆண்டும் இங்கு வந்து கொண்டாடுவோம் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.



# ஈரோட்டில் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3,000 ரொக்கம்: அமைச்சர் சு.முத்துசாமி விநியோகத்தைத் தொடங்கி வைத்தார்

ஈரோடு மாநகராட்சி, மாணிக்கம்பாளையம் வீரப்பன்சத்திரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நியாயவிலை கடையில் நேற்று (08.01.2026) நடைபெற்ற நிகழ்ச்சியில்,

தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் கலந்துகொண்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு தைப்பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3,000 ரொக்கப்பணத்தை வழங்கினார். தமிழக முதலமைச்சரின் உத்தரவின்படி மாநிலம் முழுவதும் பொங்கல் பரிசு வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதை முன்னிட்டு, ஈரோட்டில் இந்த விநியோகப் பணிகளை அமைச்சர் தொடங்கி வைத்துப் பயனாளிகளுக்குப் பொங்கல்பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார்,கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா, ஈரோடு மாநகராட்சி இரண்டாம் மண்டல தலைவர் காட்டுசுப்பு என்கிற மு.ப.சுப்ரமணியம் மற்றும் அரசு உயர் அதிகாரிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உட்படப் பலர் முன்னிலை வகித்தனர். விநியோகப் பணிகள் அனைத்தும் மாவட்டத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் தடையின்றி நடைபெற உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகஇந்தநிகழ்ச்சியின் போது தெரிவிக்கப்பட்டது.



ஈரோடு மாநகராட்சி 7வது வார்டுக்குட்பட்ட கூட்டுறவு வங்கி அங்கன்வாடி மையத்தில், தமிழக அரசின் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 7வது வார்டு மாமன்ற உறுப்பினர் சபிரா பேகம் முத்துபாவா கலந்துகொண்டு, அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களுக்குப் பொங்கல் பொருட்கள் மற்றும் பரிசுத் தொகுப்பினை வழங்கினார். இதில் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.



பாஜக ஈரோடு தெற்கு மாவட்டத்தில் நடைபெற்ற "பெருமைமிகு பாரத விவசாய மங்கையர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி" மற்றும் விவசாயிகள் விழிப்புணர்வு மாநாட்டில் மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சௌஹான் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் மாநில விவசாய அணி தலைவர் ஜி.கே.நாகராஜ், பாஜக மாநில துணைத் தலைவர் குஷ்பூ சுந்தர், மொடக்குறிச்சி எம்.எல்.ஏ டாக்டர் சி.சரஸ்வதி, மாவட்டத் தலைவர் S.M.செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழிப்புணர்வு மாநாட்டில் பங்கேற்ற குஷ்பூ சுந்தருக்கு, ஈரோடு தெற்கு மாவட்ட விவசாய அணி பொதுச் செயலாளர் சியாமளா கௌரி நினைவு பரிசு வழங்கி கௌரவித்தார்.



ஈரோடு மாநகரம் வார்டு 20ல் அமைந்துள்ள குமலன்குட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவுசங்கநியாயவிலைகடையில், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல்கருணாநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்க ஈரோடு தெற்கு திமுக மாவட்டக் கழகச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி வழிகாட்டுதலோடு திமுக 20வது வட்டக்கழக நிர்வாகிகள் மற்றும் பெரியசேமூர் பகுதி கழக நிர்வாகிகளுடன் இணைந்து ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம் கலந்துகொண்டு பொது மக்களுக்கு சிறப்புமிக்க பொங்கல் தொகுப்பினை வழங்கினார்.

# ஈரோடு மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜாவிற்கு "நேதாஜியின் சமூகப்போராளி" விருது"



ஈரோடு மாவட்டம் ஜனவரி 8,2026, சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை மற்றும் யுனெடட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டியின் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர் .தன்ராஜ் வழிகாட்டுதலுடன் மாவட்ட தலைவர் ஜெ கோபிநாதன், மாவட்ட செயலாளர் கோ. தங்கவேல், மாவட்ட பொருளாளர் கு.கோபிநாத் ஏற்பாட்டின் படி "ஈரோடு மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா அவர் தம் பல்வேறு சேவைகளின் அடிப்படையில் கௌரவிக்கும் விதமாக "நேதாஜியின் சமூகப்போராளிகள் விருது" மாவட்ட செயலாளர் G. தங்கவேல் வழங்கி கௌரவித்ததார்



நாகர்கோவில் நீதிமன்றத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் மெயில் மூலம் வெடிகுண்டு வைத்திருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் வெடிகுண்டு தடுப்பு நடவடிக்கை போலீசார் வெடிகுண்டு கண்டறியும் நிபுணர்கள் மோப்ப நாயுடன் வந்து வெடிகுண்டு கண்டறியும் கருவிகள் கொண்டு சுமார் ஒரு மணி நேரமாக சோதனையில் ஈடுபட்டுள்ளனர் இதனால் நீதிமன்ற வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது குமரி மாவட்டத்தில் தொடர்ந்து பல்வேறு அரசு கட்டடங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்து வருவது தொடர் கதையாகி உள்ளது..



தென்காசி மாவட்டம் மத்தாளம் பாறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் உள்ள நியாய விலை கடையில் இன்று (08.01.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல் கிஷோர்.இ.ஆ.ப. அவர்கள், முன்னிலையில் 4,79,753 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு, இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் வசிக்கும் 184 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புப்பையுடன் ரூ3000 ரொக்கத் தொகை மற்றும் வேட்டி, சேலையினை வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்.. உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ். பழனி நாடார் (தென்காசி), அவர்கள் .திரு.ஈ. ராஜா ( சங்கரன் கோயில்),அவர்கள் கூட்டுறவு சங்கங்களில் தென்காசி மண்டல இணை பதிவாளர் திரு.கு. நரசிம்மன் ஆகியோர் உள்ளனர்.



தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அரசு மகளிர் கலை மற்றும்அறிவியல்கல்லூரியில்(08.01.2026)நடைபெற்ற அரசு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் 444 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணிணியை வழங்கினார். உடன் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ். பழனி நாடார் அவர்கள் உள்ளார்.

# குளச்சல் ஏவிளம் கால்வாயில் அழுகிய நிலையில் ஆண் பிணம்



குளச்சல் ஏவிளம் கால்வாயில் நேற்று மாலை துர்நாற்றம் வீசியதை அடுத்து பொதுமக்கள்அளித்த தகவலின் பேரில் போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது, கால்வாயில் அழுகிய நிலையில் ஆண் சடலம் கண்டெடுக்கப்பட்டது. சடலத்தை மீட்டு அரசு மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பிவைத்தபோலீசார்,முதற்கட்டவிசாரணையில் இறந்தவர் அப்பகுதியில் சுற்றித் திரிந்த மனநலம் பாதிக்கப்பட்ட நபர் எனத் தெரிய வந்துள்ளதாகக் கூறினர். இது தொடர்பாக போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.